மன்னிப்பும் & ஒப்புரவும்

(தமிழ்ப்பதிப்பு)
TAMIL EDITION
1997

by Lee Bee Teik

e-Book Edition Published by
Cornerstone Corporation Sdn Bhd

Title: Forgiveness & Reconciliation
Author: Lee Bee Teik 1997, 2012

Tamil Print Edition: 1997
Translator: Mrs Daphne Joseph

e-Book Edition 2012 published by
Cornerstone Corporation Sdn Bhd

For enquiries, contact:
Cornerstone at http://www.cornerstone.my
Author via http://www.reconre.org

முகவுரை

சில கிறிஸ்தவர்கள் மத்தியில் 'மன்னிப்பு' என்பது பற்றிப் பேசுவது பயனற்றதாகத் தெரிகிறது. இயேசு, சிலுவையில் நமக்காகத் தமது ஜீவன்களைக் கொடுத்ததன் மூலமாக, அவருடைய மரணத்தினால் நமக்குக் கிடைக்கும் இரட்சிப்பைக் குறித்த அடிப்படையான விஷயங்களை அறிந்து கொண்ட பின், பிறருக்கு விரோதமாக நாம் செய்த பாவங்களுக்காக நாம் அவர்களால் மன்னிக்கப்படுவதும், பிறர் நமக்கு விரோதமாகச் செய்த பாவங்களுக்காக நாம் அவர்களை மன்னிப்பதும் சில விசுவாசிகளுக்கு முக்கியமற்ற சிறு விஷயமாகத் தெரிகிறது.

ஆயினும் நமது இரட்சகராகிய இயேசுவின் வாழ்க்கை, போதனை, ஊழியத்திலும், அதே போன்று பழைய ஏற்பாட்டுச் செய்திகளிலும் மன்னிப்பே சுவிசேஷத்தின் மையமாக இருக்கிறது. தம் குமாரனின் மரணம், உயிர்த்தெழுதலின் மூலமாக நமது பாவங்களுக்காக தேவனுடைய மன்னிப்பைப் பெறாமல், நமது பிதாவாகிய தேவனோடு நாம் ஒப்புரவாக்கப் பட முடியாது. மக்கள் சமுதாயமாக நாம் ஒருவரையொருவர் மன்னியாமல், ஒருவரோடு ஒருவர் நண்பர்களாகவும் இருக்க முடியாது. மனசாட்சிக்குக் கட்டுப்பட்ட, கிறிஸ்துவுக் குள்ளான சகோதர சகோதரிகளும்கூட, கடந்த காலங்களில் பிறர் தங்களுக்குச் செய்த தீமைகள், மனவேதனைகளை நினைவு கூர்ந்து கண்ணீர் சிந்துவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். இவ்விதமாக உள்ளத்தில் திரும்பத் திரும்ப ஏற்படும் காயங்கள், மனப் போராட்டங்கள், தீய பழக்கங்களில் சிக்குண்டது போன்ற உணர்ச்சியினின்றும் விடுதலை பெற இயலாதது போல் தோன்றுகிறது. பொதுவாக, இந்த நிலைமையிலுள்ள மூன்று விதமான மக்களைக் காணலாம்.

ஒரு வகையினர், தங்களுக்குக் கெடுதி செய்தவர்களைத் தாங்கள் மன்னிக்க முடியாது அல்லது மன்னிக்க மாட்டோம் என்று வெளிப்படையாகக் கூறுபவர்கள். தவறு செய்தவர்கள் அதற்கான கிரயத்தைக் கொடுத்துத் தீர்க்க வேண்டும். தங்களைத் துன்புறுத்தியவர்களிடம் இருந்து பதிலுக்கு ஏதாவது வசூலித்துக் கொண்டேயிருக்க விரும்புகிறார்கள்.

மற்றொரு வகையினர் தங்களுக்குக் கெடுதி செய்தவர்களை மனப்பூர்வமாக மன்னிக்க விரும்புகிறார்கள். ஆனால் எப்படி, என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், தேவன் தங்களுடைய பாவங்களை மன்னிக்கும்போது அதன் அர்த்தம் என்ன என்பதை இவர்கள் அறியவில்லை. எனவே, சத்துருக்களை மன்னிப்பது என்றால் அதன் அர்த்தம் என்ன என்பது இவர்களுக்குத் தெரியவில்லை.

மூன்றாவது வகையினர் தங்களைத் துன்புறுத்தியவர்களைத் தாங்கள் மன்னித்துவிட்டதாக நம்பும் கிறிஸ்தவர்கள். ஆனாலும், தான் அவர்களுக்கு நல்லவர்களாக இருக்க வேண்டும் எனும் நல்லெண்ணம் கொண்டபோதிலும், அந்த மன வேதனையில் உணர்வு ஏன் திரும்பத் திரும்ப வந்துகொண்டிருக்கிறது என்பதை இவர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை.

எனவே முதலாவது வகையினர் பிறரை மன்னிக்கும்படி அவர்களை ஊக்குவிக்கவும், இரண்டாவது வகையினருக்கு மன்னிப்பின் அர்த்தத்தைக் கற்றுக் கொடுக்கவும், மூன்றாவது வகுப்பினருக்கு, மன்னிக்க அவர்கள் கொண்டுள்ள வாஞ்சையை தேவன் ஒப்புக் கொள்ளுகிறார் என்றும், தேவன் நிச்சயமாக அவர்கள் உள்ளத்தின் தேவையற்ற உணர்ச்சிகளை ஆக்ககரமாக மாற்றித் தருவார் என்ற உறுதியளிக்கவும் இந்த சிறிய புத்தகம் உதவி செய்யும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கிறது.

இதை வாசிக்கும்போது, தாம் ஒருவரே அனைவரையும் மன்னிப்பவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தை நீங்கள் உணர்ந்து கொள்வீர்களாக. அவருக்குக் கீழ்ப் படிந்தவர்களாக, உங்களுக்குத் தவறு இழைத்தவர்களை நீங்கள் மன்னிக்கும்போது அவர் கொடுக்கும் விடுதலையை நீங்கள் உங்கள் உள்ளத்தில் உண்வீர்களாக. உங்களுடைய கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலத்தையும் அவரிடமே படிப்படியாக ஒப்புக் கொடுப்பீர்களாக. ஏனென்றால் 'அவர் உங்களுக்காகக் கவலை கொள்கிறார்.' பராமிக்கிறார்.

மன்னிப்பு என்பது தவறு செய்தவருக்கு தவறு இழைக்கப்பட்டவரால் கொடுக்கப்படும், ஒரு திசையில் மட்டும் செல்லக்கூடிய கிருபையின் பாதை.

ஒப்புரவாகுதல் என்பது முன்பு பகைவராயிருந்த இருவர் அல்லது இரு குழுவினருக்கு இடையே இரு திசைகளிலும் செல்லக்கூடிய நட்பின் பாதை.

இயேசுவைக் கொலை செய்தவர்கள், அவருக்கு விரோதமாகத் தாங்கள் பாவம் செய்து இருக்கிறோம் என்று உணர்வதற்கு முன்பே, இயேசு கிறிஸ்து அவர்களை மன்னித்தார்.

ஆனால் பாவம் செய்தவர் தன்னுடைய பாவத்தை உணர்ந்து தேவனிடமிருந்து மன்னிப்புப் பெற்று அவருடைய சிநேகிதனாகும்போது மட்டுமே ஒப்புரவாகுதல் ஏற்படுகிறது.

இதுபோலவே நாமும்கூட, நமக்குத் தவறு இழைத்தவர்கள் தாங்கள் தவறு செய்ததை உணர்வதற்கு முன்பே, நாமாக முன்வந்து அவர்களை மன்னிக்க வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

மன்னிப்பு எப்பொழுதும் ஒப்புரவாகுதலுக்கு வழி நடத்துவதில்லை. உதாரணமாக, பழித்துரைக்கப்பட்ட ஒருவர் தன்னைப் பழித்தவர் தனது தவற்றை உணர்ந்து மனஸ்தாபப் படாமலிருக்கும்போது அவரை சந்திக்கக்கூடாமல் இருக்கலாம்.

இருந்தபோதிலும் அந்த மனிதர் உயிரோடிருப்பாரானால் எப்பொழுதும் ஒப்புரவாகுதலை நாட வேண்டும். ஆனால் தேவனுடைய வேளைக்காகக் காத்திருக்க வேண்டும். மன்னிப்பவரே ஒப்புரவாகுதலை உறுதி செய்ய வேண்டும் என்று கூறி அவர் மேல் வீண்பழி சுமத்த வேண்டாம். தேவன் நம்மிடம் பொறுமையாய் இருப்பதுபோல் நாமும் மற்றவர்களிடம் பொறுமையாய் இருக்க வேண்டும்.

தேவனுடைய குமாரன் சிலுவையில் நமக்காக என்ன செய்தார் என்பதைப் பார். தலைமுறை தலைமுறையாகப் பாவிகளாகிய நாம் ஒவ்வொருவராக அவரை நமது இரட்சகராகவும் நண்பராகவும் ஏற்றுக்கொள்ள எவ்வளவு காலதாமதமாகிறது என்பதை நினைத்துப் பார்; தேவன் நம்மிடம் எவ்வளவு பொறுமையாக இருக்கிறார் என்பது தெரிய வருகிறது.

எபிரெயர் 12 : 1, 2 வாசிக்கவும்.

நமது வாழ்க்கையில் மனக்காயங்கள், நம்மை அழுத்தும் பாரங்கள் போல் கிரியை செய்வதாலும், மன்னியாமை ஒரு பாவம் என்பதாலும், அவை எவ்விதத்திலும் நமது முழு மனிதனில் பாதிப்பை உண்டுபண்ணி சேதப்படுத்துகிறது. கிறிஸ்து நமக்குக் கொடுத்து இருக்கும் வளமான வாழ்வை நாம் அனுபவித்து வாழத்தக்கதாக இந்த மனக்காயங்களை நம்மை விட்டு அகற்றி, வெளியேற்றிவிட வேண்டும். நமக்குள் மன்னியாமை இருப்பதைக் கண்டுபிடிக்க உதவக்கூடிய சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நமது வாழ்க்கையில் வேதனைமிக்க கொப்புளங்களை உண்டுபண்ணும் விஷக்கிருமிகளைப் போன்றவை மனக்காயங்கள்.

அந்தக் கொப்புளங்களில் உண்டாகியிருக்கும் வேதனை உணர்ச்சியான சீழை வெளியேற்றும் படி வைத்தியருடைய கத்தியினால் ஏற்படுத்தும் குத்து போன்றது மன்னிப்பு.

எனவே, நமது சரீரங்களில் உண்டாகும் கொப்புளங்களில் சீழ் உண்டாகி, தொடப்படும்போது வேதனை உண்டாவது போல், மன்னியாமையும் நமது வாழ்க்கையில் மனக்காயங்களுக்கு இடமளித்து, சில வேளைகளில் நாம் வேதனையை உணரக்கூடாதபடி மிக ஆழமாகக் கூடப் புதைத்து வைக்கக்கூடும். சில வேளைகளில் உட்புறமாக உள்ள ஒரு கட்டி, உதாரணமாகக் காய்ச்சல்..... போன்ற சில அடையாளங்களின் மூலமாகக் கண்டுபிடிக்கப்படுவதுபோல், மன்னிக்கப்படாமல் புதைந்து கிடக்கும் தவறுகளும் நாம் எதிர்பாராத விதங்களில் அவ்வப் போது தோற்றமளித்துக் கொண்டிருக்கும். உதாரணமாக,

1. அந்த நபரைச் சந்திக்கும்போது நேருக்கு நேராக அவருடைய கண்களை நோக்கிப் பார்க்க முடியாது. எவ்விதத்திலாவது அவரைப் பார்ப்பதைத் தவிர்க்க முயற்சி செய்வோம்.

2. நாம் அவரோடு பேச நேரிட்டாலும், நமது குரலும் நாம் நிற்கும் நிலையும் விதமும் நம்மைக் காட்டிக் கொடுத்துவிடலாம். (விறைப்பு, கடுமை, ஆணவம், இயற்கைக்கு மாறுபட்ட தன்மை) நாம் அனுமதிப்பதற்கும், அதிகமாக அவர் நமக்கு அருகில் வராதபடி நாமே வேலியடைத்துக்கொள்கிறோம்.

3. அவர் ஆசீர்வதிக்கப்படுவதைக் கண்டு அவரோடு நாம் சந்தோஷப்பட முடியாது. அவருடைய நலனுக்காக நாம் ஜெபிப்பது நமக்குக் கடினமாகவும், விருப்பமற்றதாகவும் காணப்படுகிறது.

4. அதற்குப் பதிலாக தேவன் அவனுக்கு ஒரு நல்ல பாடம் கற்றுக் கொடுப்பார் என்று மனதுக்குள் விரும்புகிறோம். உதாரணமாக, அவனுக்கு ஏதாவது கெடுதி செய்யும்படியாக தேவன் யாரையாவது அனுப்பி, அவர் மூலமாக, அவன் நமக்குக் கெடுதல் செய்யும்போது நாம் வேதனைப்பட்டது போலவோ, அல்லது அதற்கும் அதிகமாகவோ அவன் வேதனைப் பட வேண்டும் என்று விரும்புவது. வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானால், அவனிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க விரும்புகிறோம்.

5. மற்றொரு அடையாளம் கண்டுகொள்ள அரிதானது. அந்த மனிதரிடம் கோபப்பட்டு, தவறான செயலைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்வதற்குப் பதிலாக, நீண்ட நாட்களாக நமது கோபத்தை நாம் அறியாமலே நமக்குள் மூடி மறைத்து வைக்கிறோம். பின்பு என்றாவது ஒரு நாள் அந்த மனிதரைப் போலவே ரூபமும் நடத்தையும் அல்லது தோற்றமுமுள்ள ஒருவருடன் அற்ப காரியம் அல்லது மன வேற்றுமையால் தடீரென்று நமது கோபம் பொங்கியெழுந்து வரும்வரை நாம் அறியாமலே நமக்குள் புதைந்து கிடக்கும்.

வழக்கமாக, இது நமக்கு மிகவும் நெருங்கிய உறவினராக இருக்கலாம். உதாரணமாக, கணவன் அல்லது மனைவி, ஒரு குழந்தை, ஒரு மேலதிகாரி, தொழிலாளி அல்லது ஒரு போதகராகவோ, அதிகாரத்தின் சின்னமாகக் காணப்படுபவராக இருக்கலாம். நமது ஆசியக் கலாச்சாரத்தின்படி, நமக்கு மேலான அதிகாரி தவறாக செய்தாலும்கூட நாம் அவர்களைக் கேலி செய்ய முடியாதபடி தடை செய்யப்படுகிறோம். எனவே, மூடி மறைத்து அல்லது அடக்கி வைக்கப்படும் கோபத்திற்கு இதுவொரு காரணமாகப் பாவத்தைக் குறித்த கோபத்தை நமக்குள் உண்டுபண்ணுகிறது. (பல சந்தர்ப்பங்களில் இதுவே மனநிலையின் மாற்றத்தினால் வெவ்வேறு தோற்றத்தைத் தருவதாக இருக்கிறது.) நம்மையறியாமலே நம்மிலுள்ள இந்த ஆங்காரம் தற்காலிகமாக வெளிப்படும்போது, 'இத்தகைய ஒரு காரியத்தைப் பலர் முன்னிலையில் செய்தது நானாக இருக்க முடியாது' என்று அதிர்ச்சியுடன் கூறுவோம். 'ஆனால் அது நாம்தான். இது ஒரு தடவை மாத்திரம் நேரிட்டால் அதை நாம் கவனியாமல் விட்டுவிடக்கூடும்.' ஆனால் அதுவே மறுபடியும் நேரிடுமானால் நாம் அது குறித்து ஆலோசனை கேட்டு ஜெபித்து, இந்தப் பிரச்னையைத் தீர்க்கும்படி இதற்கான காரணம் அல்லது காரணங்களை நமக்கு வெளிப்படுத்துமாறு கர்த்தரிடம் கேட்கலாம்.

பகுதி III: மன்னிப்பைப் புரிந்துணர்ந்து அனுபவம் பெறுதல்

(3வது, நான்காவது பகுதிகள் 'குருத்துவப் பரிவும் ஆலோசனை வழங்குதலும்' எனும் தலைப்பில் டி.ஏ. சிமன்ஸ் என்பவரின் சொற்பொழிவுகளிலிருந்து அவருடைய சம்மதத்துடன் உபயோகிக்கப்பட்டுள்ளது.)

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நமக்கு நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களை மன்னிப்பதில் எந்தவிதமான தெரிந்துகொள்ளுதலையும் இயேசு கொடுப்பதில்லை.

ஏனென்றால்

முழுமையான சுவிசேஷத்தின் மையம் மன்னிப்பு. அது குணமடைதல், முழுமையான தன்மை இவற்றின் மையமுமாகும்.

மற்றவர்களை மன்னிக்க விருப்பமற்ற நமது நிலையானது, பிதாவாகிய தேவனிடமிருந்து மன்னிப்பை நமக்குக் கொண்டு வருகிற பாவத்தை சேதப்படுத்துகிறது.

'ஆம், ஒரு கிறிஸ்தவனாக நான் அவர்களை ஏற்கனவே மன்னித்துவிட்டேன். கடந்த காலம் கடந்து போனதுததான்' என்று இதுபோன்ற வார்த்தைகளால் மன்னிப்பைப்பற்றி பொதுவாகக் கூறிவிடுகிறார்கள். ஆனால் மன்னிப்பைப் பற்றி இந்த விதமாக நினைப்பதும் பேசுவதும் உண்மையற்றது. அதனால் இது பயனற்றது. நாம் இன்னமும் அந்த பாரத்தைச் சுமந்துகொண்டுதான் இருக்கிறோம்.

மன்னிப்பு என்பது கீழ்க்காணும் **காரியங்களல்ல:-**

1. தவறைப் புறக்கணித்துப் பாராமுகமாய் இருத்தல் அல்லது வெளியே தெரியாமல், போர்வையால் மூடுவதல்ல.

2. பொறுமையோடு சகித்து, வெள்ளையடிப்பதுபோல் தவறை மேலாகப் பூசுதல் (உதாரணம்: யோசேப்பு தன் சகோதரரின் செய்கை தவறானது என்று பார்த்தான். அதற்கு மேற்கொண்டு எதையும் செய்யவில்லை.)

3. தவறைக் குறித்து வியாக்கியானம் செய்து, தவறு செய்தவனுடைய பலவீனத்தின் நிமித்தம் அவனை மன்னித்துவிடுதல். தவறு செய்தவர்களை மனோதத்துவ ரீதியில் ஆராய்ந்து பார்த்தல், விஷேசமாக நெருங்கிய உறவினருக்குள் மிகத் தேவையாக இருக்கிறது. (உதாரணம்: கணவன், மனைவி / உடன்பிறந்தோர் / ஆசிரியர்கள் / போதகர்கள் / சபை மூப்பர்கள்.)

4. குற்றத்தை ஏற்றுக்கொள்வது (உதாரணம்) ஒரு பெண் சிறுமியாக இருக்கும்போது தகப்பனால் கற்பழிக்கப்பட்டு, பின்னர் அவளே தன் தகப்பனை வசியம் செய்தாள் என்று தாயாரால் குற்றஞ்சாட்டப்படுதல்.

அநேக கிறிஸ்தவர்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டால் தாங்கள் நல்லவர்கள் என்று நினைக்கின்றனர். ஆனால் தவறான பழியினால் தன்னைத்தானே குற்றவாளியாகக் கருதி குற்ற உணர்ச்சியுடன், மனப்பாரத்துடன் ஜீவிக்கும் நிலைமை.

நமக்கு இழைக்கப்பட்ட தீமை என்ன என்பதை சரிவர மதிப்பிட்டு அறியப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஒத்தாசை செய்யும்படி வேண்டிக்கொண்டு, அதனால் ஏற்படும் வேதனையை நாம் சரிவர உணர வேண்டும். மற்றபடி, உண்மையில் இல்லாத ஏதோ ஒன்றின் குணமாகுதலுக்காக நாம் ஜெபித்துக்கொண்டு, மன்னிக்கப்பட வேண்டிய தவறான செயலை உணராமல் விட்டுவிடுவோம்.

மன்னிப்பு என்பது:-

1. திட்டவட்டமான ஒரு குறிப்பிட்ட தவறை நேருக்கு நேர் மீண்டும் பார்த்தல் - உண்மை நிலை

ஆலோசனை: உங்கல் மேல் விழுந்த அடிகளையும் மனக்காயங்களையும் குறிப்பிட்டு எழுதவும். ஒவ்வொன்றாக மன்னித்த பின் அதைக் கிழித்து எறிந்து போடலாம்.

2. உங்களது மனக்காயங்கள், வேதனைகளை நேருக்கு நேர் மீண்டும் பார்த்தல்.

கேள்வி - 'அந்த நேரத்தில் அதைப்பற்றி உனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் என்ன?'
(உதாரணம்) தள்ளிவிடப்படுதல் / தாழ்வும் அவமானமும், ஒப்பிடுதல், புறக்கணிப்பு, உதாசீனம், ஏமாற்றம், அநீதி, காட்டிக் கொடுக்கப்படுதல், கைவிடப்படுதல்.

3. உன்னுடைய கோபம், மனக்கசப்பை உணர்ந்து மீண்டும் பார்த்தல்.

எபேசியர் 4:25-31 வாசிக்கவும்.
'கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்.'

கிறிஸ்தவர்கள் வழக்கமாகச் சொல்வது போல், 'ஒரு கிறிஸ்தவனாக நான் அவனை மன்னித்துவிட்டேன்' என்று வாயளவில் சொல்லிக்கொண்டு உன்னுடைய மனக்கசப்பை மறுக்காதே. வெறுப்பை நீ மறைத்துவைத்துப் புதைத்துக்கொண்டால் குணமாகுதலுக் குரிய சாத்தியத்தையும் நீ புதைத்துவிடுகிறாய்.

4. சிலுவையை நோக்கிப் பார்த்தல்.

எபேசியர் 4:32 - 'ஒருவருக்கொருவர் தயவாகவும் மன உருக்கமாகவும் இருந்து கிறிஸ்து வுக்குள் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.'

கிறிஸ்து நமது பாவங்களுக்கான குற்றச்சாட்டு, தண்டனை, அவமானம் அனைத்தையும் தம்மீது எடுத்துக்கொண்டார். அது போலவே நாம் மன்னிக்கும்போதும் அந்த நபருடைய குற்றம், தண்டனை, அவமானத்தை நம்மீது எடுத்துக் கொள்கிறோம்.

'பாடு அனுபவிக்கும் அன்பே, மன்னிக்க ஒரே வழி, தேவன் உங்களுக்குச் செய்திருப்பது போல் நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்.'

'நான் செலுத்த வேண்டிய பெரிய கடன் தொகையை தேவன் எனக்கு மன்னித்திருப்பதால், நான் எப்படி சிறிய கடன் தொகையைப் பிறரிடமிருந்து வசூலிக்க முடியும்?'

எனவே, மற்றவர்களை மன்னிப்பதில் நான் தேவனுடைய பார்வையில் நியாயமானதையே செய்கிறேன்.

1. இது ஒரு மாறும் நிலை... மனிதனின் பங்கு... விருப்பம்.

கேள்வி - *'அந்த நபரை மன்னிக்க நீ விரும்புகிறாயா?'*

இல்லையென்றால்

'தேவன் உன்னை விரும்பச் செய்வது உனக்கு விருப்பமா?'

மாற்கு 9:14-29

2. இது ஒரு செயல் முறை... தேனுடைய பங்கு... உணர்ச்சி

உணர்ச்சிகள் குணமடைய சில தினங்களாகலாம். விருப்பம்போல் செய்வது, ராக்கெட்டை விண்வெளியில் செலுத்துவதுபோல் ஒரு நொடியில் நடைபெறக்கூடிய காரியம். ஆனால் உணர்ச்சிகளின் குணமாகுதல், சாமான்களை ஏற்றிச் செல்லும் ரயில் வண்டி போல் மெதுவாகவே நடைபெறும்.

ஞாபகத்தில் வை:
நம்முடைய உணர்ச்சிகளை மாற்றிக் கொள்வதற்குத் தேவைப்படும் காலத்திற்காக தேவன் நம்மைக் குற்றப்படுத்த மாட்டார். எனவே ஒரு முறை நாம் மன்னித்துவிட்டோமானால், அதன் பின் நமது உணர்ச்சிகளின் போராட்டத்தை மேற்கொள்வதற்குப் பின்வரும் 5 காரியங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

நினைவுபடுத்து:
இல்லை என்கிற எதிர்மறையான உணர்ச்சிகள் சாத்தானிடமிருந்து வருகின்றன.

திரும்பத் திரும்பச் சொல்:
...நீ மன்னித்துவிட்டாய்... சில சாட்சிகளுக்கு முன்பாக மன்னித்தல் (ஒரு தனிப்பட்ட கூட்டத்தில்) உதவியாக இருக்கும். அவர்கள் உனக்கு உறுதியளித்து, உன்னுடைய தீர்மானத்திற்கு உன்னை உத்தரவாளியாக்குகிறார்கள். கிறிஸ்தவர்களின் சமூகச் சூழ்நிலையால் மன்னிப்பு கிரியை செய்கிறது.

மறுத்துவிடு:
...நீ இன்னும் மன்னிக்கவில்லை என்ற குற்ற உணர்ச்சியை மறுத்துவிடு.

நினைவு கூர்:
...உன்னை மாற்றுவதில் தேவன் உண்மையுள்ளவர்.

மகிழ்ந்து களிகூரு:
...நீ அந்த நபரை மன்னித்துவிட்டதற்காக தேவன் சந்தோஷப்படுகிறார். குணமாகுதலின் ஒவ்வொரு படியிலும் தேவன் பிரசன்னமாக இருக்கிறார்.

மன்னிப்பில் பின்வரும் காரியங்கள் அடங்கியுள்ளன:

1. பழையவற்றைத் தள்ளிவிட்டு புதியவற்றை ஏற்றுக்கொள்ளுதல்.... உலகக் கண்ணோட்டம், உறவுகள், வாழ்க்கை முறைகள்; உதாரணமாக, உனக்குத் தவறு இழைத்தவர் பெரிய செல்வந்தராக இருந்தால் நீயும் செல்வந்தனாகி அவனுக்கு சமமாக விரும்பலாம். இது பண ஆசைக்கு வழி நடத்துகிறது.

2. இப்போது நீ எதற்குப் பொறுப்புள்ளவனாக இருக்கிறாயோ அதற்குரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல். உனக்கு ஏற்படும் நிலைமைகளுக்கு இனிமேலும் நீ மற்றவர்களைக் குறை சொல்ல முடியாது. பரிசுத்த ஆவியானவரின் புதிய குரலுக்குச் செவி கொடு. கடந்த காலத்தில் நாடாவில் பதிவு செய்யப்பட்டதல்ல. (உதாரணம்) 'இது அவள் செய்த தப்பிதம்.'

3. தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுதல். (1 யோவான் 1:9) நாம் கொண்டிருந்த மனக்கசப்பாகிய பாவத்தை தேவன் நமக்கு மன்னித்ததுபோல் நம்மை நாமே மன்னித்துக் கொள்ள வேண்டும். அல்லவென்றால் நம்முடைய தரம் தேவனுடைய தரத்தைவிட உயர்ந்தது என்று நாம் எண்ணுவது போல் இருக்கிறது. (உதாரணம்) தன்னுடைய சிநேகிதனால் கற்பழிக்கப்பட்ட பெண், அந்த உறவில் தான் ஆற்றிய பங்குக்காகத் தன்னைத்தானே மன்னிக்கக்கூடாதவளாக இருக்கலாம்.

4. காணக்கூடிய சில உபகரணங்களை உபயோகிக்கலாம். (உதாரணம்) நாம் பட்ட அடிகள், காயங்களைக் குறிப்பிட்டு எழுதிய தாளைக் கிழித்து எறிதல் அல்லது தண்ணீரில் அடித்து விடுதல். தூய்மையான எண்ணங்களை உபயோகி.

5. ஈடு செய்தல். பறிக்கப்பட்ட உரிமையை அல்லது இழக்கப்பட்டதைத் திரும்பக் கொடுத்து ஈடு செய்தல். எதிர்ப்பு இருந்த இடத்தில் ஒப்புரவாகுதல். இதில் தேவனுடைய நேரத்துக்காகக் காத்திருக்க வேண்டும். நெருக்கடியான நிலைமையில் வசிக்க நேரிடலாம். (உதாரணம்) உனக்குத் தீங்கு செய்த உறவினருடன் தொடர்ந்து வாழ்க்கை நடத்துவது.

6. 50/20 தூரநோக்கு... எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய நோக்கம் என்ன என்பதைக் கண்டுபிடி. (ஆதியாகமம் 50:20, ரோமர் 8:28)

7. தேவனுக்கு விரோதமான மனக்கசப்பைச் சந்தித்தல். சிறப்பாக கிறிஸ்தவக் குடும்பங்களிலும், இன்னும் அதிகமாக குருமாரின் குடும்பங்களிலும் வளர்ந்தவர்களிடம் இந்த மனக்கசப்பு சாதாரணமாகக் காணப்படுகிறது. ஏனென்றால் தேவனை அறிந்து அவரில் அன்பு கூரவேண்டிய மக்கள், தேவனை சரியாகப் பிரதிநிதிக்காமல் அவரைத் தவறாக எடுத்துக் காண்பிக்கிறார்கள். இரக்கம் நிறைந்த நமது தேவனால் இந்தப் பாவத்திற்கு மன்னிக்கப்படுதல் மிக்க மகிழ்ச்சியூட்டும் சந்தோஷமான காரியமாகும்.

மற்றவர்கள் உங்களுக்கு விரோதமாகச் செய்த பாவங்களை, நீங்கள் அவர்களை மன்னிக்கும் போது இரக்கமும் மன்னிப்பும் நிறைந்த தேவன் தாமே தம்முடைய சுகமளிக்கும் கிருபையை உங்களுக்குத் தந்தருளுவாராக.

ஷாலோம்! சமாதானம்!

குறிப்புப் புத்தகங்கள்:

* Living with Your Dreams by D.A. Seamands

* Healing Grace

மன்னிப்பின் முதல் அடி எடுத்து வைப்பதற்குத் தடைகளாக இருக்கக்கூடியவற்றைக் கண்டுகொள்ள ஒரு பயிற்சி
மன்னிக்க
மன்னிக்கப்பட

1. அறியாமை

அப்போஸ்தவர் 2:22-42 வாசிக்கவும்.

கேள்வி: இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உண்மையைப் பேதுரு அவர்களிடம் கூறுவதற்கு முன்பு யூதர்கள் ஏன் தங்களுடைய பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட வில்லை?

2. தீமையானது என்று தெரிந்தபோதிலும் வசதியான கடந்த காலத்தை நிராகரித்து விட்டுவிட விருப்பமில்லை. வசதியற்றதாக இருந்தபோதிலும் நன்மை புதிய ஆரம்பங்களுடன் வாழத் தீர்மானிக்கும்போது நமது வாழ்க்கை முறையிலும், தேவனைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும், தன்னைப் பற்றியும் நாம் கொண்டுள்ள எண்ணத்திலும் ஒரு மாற்றம் தேவைப்படுகிறது.

அ. யோவான் 5:1-9 வாசிக்கவும்.

கேள்வி: இந்த மனிதன் குணமடைவதற்கு எது முக்கியமான தடையாக இருந்திருக்கக் கூடும்?

ஆ. லுக்கா 17:32, ஆதியாகமம் 19:24-26 இந்த வரிசையில் வாசிக்கவும்.

கேள்வி: இஸ்ரவேலர் எதைப் பின்னிட்டுத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தனர்? ஏன்?

3. இந்த உலகத்தில் தேவன் தமது நோக்கங்களுக்குத் தக்கதாகத் தீமையை நமக்கு நன்மையாக மாற்றக்கூடும் என்பதை நம்புவதற்கு விருப்பமில்லாமை.

அ. வரிசையாக வாசிக்கவும்:

ஆதியாகமம் 42:7... 43:30... 45:1-15... 50:1-21

கேள்வி: மேற்கண்ட பகுதிகளில் யோசேப்பின் சிந்தனை, உணர்ச்சிகளைக் கண்டு பிடித்துக் குறிப்பிடுக.

ஆதி 50:20ஐ ரோமர் 8:28 உடன் ஒப்பிட்டுப் பார்.

ஆ. வரிசையாக வாசிக்கவும்.

ஆதியாகமம் 12:1, 15:1-6

2 நாளாகமம் 20:7, யாக்கோபு 2:23

ஆபிரகாம் ஏன் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டான்?

முக்கியமான விஷயம் என்னவென்றால்,

தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பதென்றால் தேவனில் நம்பிக்கை,

அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால் ஆபிரகாம் தன்னுடைய நிலையான விசுவாசத்தின் ஆதாரத்தை எங்கு கண்டு பிடித்தான்?

ஆதியாகமம் 12:7, 13:8

பலிபீடம் ஸ்திரமான, வலுவான, நகர்த்தக்கூடாத ஒன்றின் சின்னமாக விளங்குகிறது. தமது நன்மைகளை நமக்குக் கொடுக்க வல்லவரான உண்மையுள்ள தேவனில் நாம் நம்பிக்கை வைக்கிறோம்.

கூடாரம் தற்காலிகமானதும் நகர்த்தக்கூடியதாகவும் இருக்கிறது.

தேவன் ஆபிரகாமுக்குத் தம்மை வெளிப்படுத்தியபோது, ஆபிரகாம் தேவனுக்குப் பலிபீடங்களைக் கட்டினான். ஆனால் ஒரு நாடோடியாக அவன் பயணம் செய்கையில் தனக்குத் தேவையற்றவரகளை விட்டுவிட்டு, தேவன் அவனுக்குச் சிறந்தது என்று காண்பிக்கும் இடத்திற்குச் சுலபமாகப் போகும்படி வழியில் அவன் தனக்குக் கூடாரங்களைப் போட்டான்.

கேள்வி: சரியான சிந்தனை, உணர்ச்சி, ஜீவனம் ஆகிய தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி, நாம் சிந்திக்கும் தவறான வழிகளை விட்டுவிட விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறோமா? தேவனை நம்பி அவருக்குக் கீழ்ப்படிய நாம் விரும்புகிறோமா?

டி.ஏ. சீமன்ட்ஸ்

குணமடைதலின் மையம் (இருதயம்) மன்னிப்பு என்றால்,
குணமடைதலின் ஆரம்பம் (தலை) தேவன் அருளும் ஈவு.
எனவே,
உணர்ச்சி சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தேவையிலும் ஆவிக்குரிய காரியம் ஒன்று இருக்கிறது.